தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்
12th December 16, 2013

# சங்கர நேத்ராலயாவில் மரபியல் கருத்தரங்கம்

சென்னை, டிச. 14—

மரபியல் ஆலோசனை மற்றும் மரபணு பரிசோதனை குறித்த ஒரு நாள் கருத்தரங்கம், சென்னை சங்கர நேத்ராலயாவில், வரும், 21ம் தேதி நடக்கிறது.

சென்னை சங்கர நேத்ராலயாவின், மூலக்கூறியல் மற்றும் மரபியல் துறை, டிச., 21ம் தேதி, 'மரபியல் ஆலோசனை மற்றும் மரபணு பரிசோதனை' குறித்த, ஒரு நாள் கருத்தரங்கை நடத்துகிறது.

மரபியல் ஆலோசனை முறைகள், நோய் கண்டறிவதில் மூலக்கூறியலின் பங்கு, மரபணு சோதனையின் முக்கியத்துவம் குறித்தும், நிபுணர்கள் விளக்கம் அளிக்க உள்ளனர்.

இதில் பங்கேற்க விரும்பும் மருத்துவ மாண வர்கள், டாக்டர்கள் மற்றும் அறிவியலாளர்கள், வரும், 15ம் தேதிக்குள் [நாளை] விண்ணப்பிக்க வேண்டும் என, சங்கர நேத்ராலயா அறிவித்துள்ளது.

மேலும் விவரங்களுக்கு, www.thesnacademy.ac.in என்ற இணையதள முகவரியில் தெரிந்து கொள்ளலாம்.